# முதல்வருடன் - கவிப்பேரரசு வைரமுத்து சந்திப்பு!



சென்னை, ஆக.14-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பு குறித்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், வலைதளங்களில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

**"தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று மரியாதை நிமித்தமாகச் சந்தித்தேன்.**

**கலை, அரசியல் நாட்டு நலம், உடல்நலம் குறித்துப் பூவோடு காற்றைப்போல் உரையாடினார்.**

**அளவான உடல்மொழி, பழிசொல்லாத பண்பாடு, மொழியோ கோயில் மணி, மொழிவதில் கலைஞர் தொனி; இருவர்க்கும் நிறைவு தருவதே சந்திப்பின் பூரணம் உணர முடிந்தது!"**

இவ்வாறு அப்பதிவில் கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிட்டுள்ளார்.

## சென்னையில் மழை எதிரொலி: விமான சேவை பாதிப்பு!

*சென்னை, ஆக. 15 -*

*சென்னையில் கனமழையால் பல்வேறு சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக அடுத்த 24 மணி நேரத்திற்கு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.*

*அதன்படி, சென்னையில் விடிய விடிய இடி மின்னலுடன் கனமழை கொட்டி தீர்த்தது. கனமழையால் பல்வேறு சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால், வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.*

*கனமழை எதிரொலியாக சென்னையில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சார்ஜா, துபாய் விமானங்கள் தரை இறங்க முடியாமல் திருப்பி விடப்பட்டன. சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு புறப்பட வேண்டிய 10 விமானங்கள் தாமதமாக புறப்பட்டன. மேலும் துபாய், மும்பை, பாரீஸ் உள்ளிட்ட இடங்களுக்கு புறப்பட்ட விமானங்கள் சில மணி நேரம் தாமதமாக புறப்பட்டன.*



திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் சார்ந்த அய்யங்குளத்தை தூய்மை அருணை சார்பில் தூர்வாரி சீரமைத்து அழகுபடுத்தும் பணியினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர். கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் த.பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், நெடுஞ்சாலை துறை தலைமை பொறியாளர் சந்திரசேகரன், கண்காணிப்பு பொறியாளர் பழனிவேல், திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் தட்சணாமூர்த்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், தூய்மை அருணை பணியாளர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டிலிருந்து தொலைதூரத்தில் வசித்தாலும் கூட

# வெளிநாடு வாழ் தமிழர்கள் தமிழுணர்வு மிக்கவர்கள்!

## பன்னாட்டு தமிழ் மொழி பண்பாட்டுக் கழக கருத்தரங்கில் அமைச்சர் க.பொன்முடி பேச்சு!

*சென்னை, ஆக. 15-*

*தமிழ்நாட்டில் இருக்கும் தமிழர்களை விட வெளிநாட்டில் இருக்கும் தமிழர்களுக்குதான் தமிழ் உணர்வு அதிகமாக உள்ளது என அமைச்சர் க.பொன்முடி பேசினார்.*

*கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு பன்னாட்டு தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் சென்னை வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தின் தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம் ஆகியவை இணைந்து நடத்திய ஒரு நாள் பன்னாட்டு 'முதல் உலகத் தமிழ் வளர்ச்சி மாநாடு' சென்னை சைதாப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.*

*மாநாட்டுக்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் சோ.ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாநாட்டின் தொடக்க விழாவில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 'உலகெங்கும் கலைஞர்' என்னும் புத்தகத்தை வெளியிட்டு மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.*

*மாநாட்டில், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வெளிநாட்டு தமிழர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், எம்.பி.க்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.கே.எஸ்.இளங்கோவன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சென்னை மாநகராட்சி துணை மேயர் எம்.மகேஷ் குமார், வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் கோ.விஸ்வநாதன், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக துணை வேந்தர் திருவள்ளுவன், சென்னை பன்னாட்டு தமிழ் மொழி பண்பாட்டுக் கழகம் - சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

*மாநாட்டில் அமைச்சர் க.பொன்முடி பேசியதாவது: -*

*தமிழ்நாட்டில், கலை படிப்புகளில் தமிழை கொண்டு வந்தவர் அண்ணா. அறிவியல் படிப்புகளில்*



*தமிழை கொண்டு வந்தவர் கலைஞர். பொறியியல் பாடத்திலும் தமிழை முதலில் கொண்டு வந்தவர் கலைஞர் தான். இப்போது, பொறியியல் கல்லூரியில் தமிழை பாடமாக கொண்டு வந்தவர் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின். தமிழ்நாட்டில் இருக்கும் தமிழர்களை விட வெளிநாட்டில் இருக்கும் தமிழர்களுக்கு தான் தமிழ் உணர்வு அதிகமாக உள்ளது. இது நாடு அறிந்த உண்மை. வெளிநாடுகளுக்கு செல்லும் பொழுது தமிழினுடைய பெருமை தெரியவரும்.*

**தமிழ்மொழி உணர்வோடு ஒன்றுபடுவோம்!**

*வெளிநாடு மட்டுமல்ல வெளி மாநிலங்களுக்குச் சென்றவர்களுக்குக் கூட நம்மை விட தமிழ் உணர்வு அதிகம் இருப்பதை நாம் பார்க்கிறோம்.*

*அந்த தமிழ் உணர்வை வளர்க்க வேண்டும் என்ற உணர்வோடு தான் "உலகெங்கும் கலைஞர்" புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இதை எல்லா மாணவர்களும் படித்து தெரிந்து கொள்ள வேண்டும். நாமும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். 17 வெளிநாட்டினர் பேசியது இந்தப் புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ளது.*

*உலகத் தமிழர்களே! தமிழ் மொழி உணர்வோடு நாம் ஒன்றுபடுவோம்,*

*கலைஞர் என்ன நினைத்தாரோ அதைச் சென்றடைவோம்,*

*நாமெல்லாம் இளைஞர்களாக இருந்த பொழுது தமிழ் உணர்வு வளர்ந்தது, ஆனால் இன்றைய இளைஞர்களிடம் அது கேள்விக்குறியாக இருக்கிறது அதை வளர்க்க வேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.*

*இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி பேசினார்.*

### ஆசிரியப் பெருமக்கள் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திட வேண்டும்!

# மாணவர்கள் எதிர்காலத்தில் உயர் பதவிகள் பெற்று சிறந்து விளங்கிட வழிவகை செய்திடுவீர்!

## கிருஷ்ணகிரியில் 'ஆசிரியர்களுடன் அன்பில்' நிகழ்ச்சியில் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

*கிருஷ்ணகிரி, ஆக.15-*

*ஆசிரிய பெருமக்கள் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தி, அவர்கள் எதிர்காலத்தில் உயர் பதவிகள் பெற்று சமூகத்தில் சிறந்து விளங்க வழிவகை செய்ய வேண்டும் என்று 'ஆசிரியர்களுடன் அன்பில்' (நம்மில் ஒருவர்) நிகழ்ச்சியை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி துவக்கி வைத்து வேண்டுகோள் விடுத்தார்.*

*கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில், கிருஷ்ணகிரி மாவட்ட பள்ளிக் கல்வித்துறையுடன் இணைந்து கல்வியாளர்கள் சங்கமம் நடத்தும் ஆசிரியர்களுடன் அன்பில் (நம்மில் ஒருவர்) நிகழ்ச்சியை, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கே.எம்.சரயு, சட்டமன்ற உறுப்பினர், தே.மதியழகன் (பர்கூர்), சந்திராயன் திட்ட இயக்குநர், மயில்சாமி அண்ணாதுரை, ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதீஸ்குமார் ஆகியோர் முன்னிலையில் 12.08.2023 அன்று துவக்கி வைத்து உரையாற்றினார்.*

*அப்போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் , அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-*

*முதலமைச்சர் தலைமையிலான அரசு, கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக பள்ளிகல்வித்துறைக்கு நிதி*



*நிலைஅறிக்கையில் ரூ.36 ஆயிரம் கோடி நிதியினை ஒதுக்கியுள்ளார்.*

*அதேப்போல சுகாதாரத் துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்து கூடுதல் நிதி ஒதுக்கி பள்ளிக் கல்வித் துறையும், சுகாதாரத் துறையும் இரண்டு கண்களாகக் காத்து வருகிறார்.*

*அதனடிப்படையில் 'இல்லம் தேடி கல்வி', 'நம்பள்ளி நம் பெருமை', எண்ணும் எழுத்து, ஆசிரியர் மனசு திட்டம், மாநில கல்விக்குழு, ஆசிரியர்களுடன் அன்பில், தகைசால் பள்ளிகள், தொழிற்கல்வி பயிற்சி, பன்னாட்டு கல்வி சுற்றுலா, மாணவர் செஸ் ஒலிம்பியாட், நான் முதல்வன் திட்டம், கலைத் திருவிழா, மணற்கேணி, மாதிரிப் பள்ளிகள், காலை நேரச் சிற்றுண்டி, 100 சதவிகித வெளிப்படையான கலந்தாய்வு, மெய்நிகர் நூலகம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், தமிழ் திறனாய்வுத் தேர்வு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து உயர் கல்விகளும் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு, 'புதுமைப் பெண்' திட்டம், 224/77 கள ஆய்வு, கோடைக் கொண்டாட்டம், சிறார் திரைப்படங்கள், நம்ம ஸ்கூல் பவுண்டேசன், சிற்பி திட்டம், இலக்கிய திருவிழாக்கள், கலைஞர் நூற்றாண்டு நூலகம், வாசிப்பு இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

*முதலமைச்சர் அவர்கள், அரசுப் பள்ளியில் 6-ம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை படித்து உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கி வருகிறார்கள். அதேப்போல நான் முதல்வன் திட்டத்தின் மூலம் உயர்கல்வி பயில்வதற்கு வழிகாட்டியாகவும், திறன்மேம்பாட்டு பயிற்சிகள் என 13 இலட்சம் மாணவர்கள் கடந்த 1 ஆண்டில் பயனடைந்துள்ளனர். வரும் கல்வி ஆண்டில் 12 மற்றும் 10 வகுப்பில் தேர்ச்சி விகிதம் முதல் 10 இடங்களுக்குள் கொண்டு வர ஆசிரிய பெருமக்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.*

*மேலும் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆசிரியர்களின் எண்ணம், கோரிக்கைகள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலனை செய்து தங்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வார் என உறுதியளிக்கிறேன்.*

*பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவு திட்டத்தை கொண்டு வந்தார். முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் மதிய உணவுடன் 1 முட்டை வழங்க ஆணையிட்டார்கள். தற்போது , தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் 18 இலட்சத்து 50 ஆயிரம் மாணவ செல்வங்கள் பயன் பெறும் வகையில் காலை சிற்றுண்டி திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். எனவே ஆசிரிய பெருமக்களாகிய நீங்கள் மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தி அவர்களை எதிர்காலத்தில் உயர்ந்த பதவிகளுக்கு வருவதற்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.*

*இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி உரையாற்றினார்.*

*முன்னதாக , உணவுத் துறை அமைச்சர், பள்ளி மாணவர்கள் அரசின் திட்டங்களான காலை உணவுத் திட்டம், மிதிவண்டி வழங்கும் திட்டம், விளையாட்டு உபகரணங்கள் போன்ற திட்டங்கள் குறித்து செயல் விளக்கம் அளித்ததை பார்வையிட்டார்.*

*தொடர்ந்து நிமிர்ந்து நில் கையேட்டை வெளியிட்டு 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற பள்ளி தலைமையாசிரியர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ் களை வழங்கினார். மேலும் 1 இலட்சம் மாணவர்கள் நூலக உறுப்பினர்களாக பயன்பெறும் வகையில் ரூ. 12 இலட்சம் வழங்கிய ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனர்.ராமன் மகசேசே , குழந்தை பிரான்சிஸ்க்கு பொன்னாடை அணிவித்து கேடயம் வழங்கினார்.*

*அதன் தொடர்ச்சியாக மாணவ மாணவியர்களுக்கு நூலக உறுப்பினர்களுக்கு சான்றுகளை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கே.பி. மகேஸ்வரி, கிருஷ்ணகிரி அரசு மருத்து கல்லூரி முதல்வர் மரு.மு.பூவதி, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர், சி.பாபு, தொடக்கக் கல்வி அலுவலர்கள் திருமதி. மணிமேகலை, முனிராஜ், நரசிம்மன், ஆனந்தன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், வெங்கடேசன், ஒருங்கிணைப்பாளர்கள் சர்தார், கணேஷ், வடிவேல், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் எஸ்.கே.நவாப், மற்றும் 1200 ஆசிரியப் பெருமக்கள், 400க்கும் மேற்பட்ட மாணவ-மாணவியர்கள் கலந்துகொண்டனர்.*



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் தொடர்ச்சியாக, கோத்தகிரி ஒன்றிய தி.மு.க. சார்பில், ஜக்கனாரை பகுதியில் கழக இருவண்ண கொடியேற்றி, நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச்செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் ஆகியோர் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் முப்பெரும் விழா!

## மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில்!

*ஈரோடு, ஆக. 15 -*

*முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் இன்று (15.8.2023 செவ்வாய்க்கிழமை) காலை 7.30 மணிக்கு கவுந்தப்பாடி நால்ரோட்டில் முதலமைச்சர் கோப்பையில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களை பாராட்டி, ஊக்குவித்து நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், மாரத்தான் ஓட்டம் பரிசளிப்பு விழா மற்றும் சான்றிதழ் மரக்கன்றுகள் வழங்குதல் ஆகிய முப்பெரும்விழா மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் பவானி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.துரைராஜ் வரவேற்புரையில் நடைபெற உள்ளது.*

*விழாவில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடாசலம், மாநில மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் செந்தில்நாதன், மாநில விவசாய இணைச் செயலாளர்கள் கள்ளிப்பட்டி மணி, எல்.பி. தர்மலிங்கம், மாநில மகளிர் தொண்டரணி ஆலோசனை குழு உறுப்பினர் காயத்திரி சீனிவாசன், மாநில நெசவாளரணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், மாநில நெசவாளரணி துணை செயலாளர் ஜி.வி.மணிமாறன், மாவட்ட அவைத்தலைவர் எ.பெருமாள்சாமி, மாவட்ட துணை செயலாளர்கள் எம்.பி.அறிவானந்தம், எஸ்.எஸ்.குருசாமி, கீதாநடராஜன், மாவட்ட பொருளாளர் கே.கே.சண்முகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஓ.சுப்பிரமணியம், எஸ்.பி.புகழேந்தி, வி.பி.சண்முகசுந்தரம், எம்.எஸ்.சென்னிமலை, பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.சம்பத்குமார், சரஸ்வதி பழனிச்சாமி, கா.கீ.ராஜேந்திரன், ஆர்.மாதேஸ்வரன், ஜெயராஜ், என்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.எஸ்.வெள்ளியங்கிரி, எஸ்.கீதா நகரச் செயலாளர்கள் பவானி ப.சீ.நாகராஜன், புளியம்பட்டி பி.ஏ.சிதம்பரம், கோபி என்.ஆர்.நாகராஜ், சத்தியமங்கலம் ஜானகிராமசாமி, புஞ்சை புளியம்பட்டி டி.ஜனார்தனன், பவானி நகரமன்ற தலைவர் சிந்தூரி இளங்கோ ஒன்றிய கழக செயலாளர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், கோபி தெற்கு சிறுவலூர் எஸ்.ஏ. முருகன், கோபி வடக்கு கோரக்காட்டூர் கே.ரவீந்திரன், நம்பியூர் மெடிக்கல் ப.செந்தில்குமார், சத்தி வடக்கு ஐ.ஏ.தேவராஜ், சத்தி தெற்கு கே.சி.பி.இளங்கோ, பவானி தெற்கு கே.பி.துரைராஜ், பவானி வடக்கு பவானி கே.ஏ.சேகர், அம்மாபேட்டை வடக்கு கே.எஸ்.சரவணன், தெற்கு எம்.ஈஸ்வரன் பவானிசாகர் வடக்கு கே.எஸ். மகேந்திரன், தெற்கு என். காளியப்பன், டி.என். பாளையம் எம்.சிவபாலன், தாளவாடி மேற்கு டி.சிவண்ணா, கிழக்கு மா.நாகராஜ்பவானி நகர, ஒன்றிய நிர்வாகிகள் டி.கே.சுப்பிரமணியம், ஆர். ரங்கசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். கோவிந்தராஜ், கே.ஆர்.கந்தசாமி, பவானி கண்ணன், ஜி.வி.குமணன், பழனிசாமி, பாலசுப்பிரமணியம், ரங்கநாதன், என்.பி.சேகர், க.சு. மகேந்திரன், என்.ஜி.பாலமுருகன், ஜி.மணிமேகலை, எஸ்.நாகராஜன், க.தம்பி ராஜா, எம்.ஜோதிமணி, கே.பி.விஜயகுமார், எஸ். எம்.கருப்பண்ணன், பி.நடராஜ், எஸ்.முருகன், ஜம்பை ந.ஆனந்தகுமார், ஆப்பகூடல் கே.கோபால கிருஷ்ணன், சலங்கபாளையம் எஸ்.பழனி சாமி, அம்மாபேட்டைஎஸ். பெரியநாயகம். நெரிஞ்சி பேட்டை என்.பி.கண்ணன், ஒலகடம் ஒ.ஆர்.மகேந்திரகுமார், அந்தியூர் எஸ்.கே. காளிதாஸ், அத்தாணி ஏ.ஜி. எஸ்.செந்தில்கணேஷ், கூகலூர் எஸ்.பி.ராஜாராம், பி.மேட்டுப் பாளையம் எம்.எம்.குமாரசாமி, லக்கம் பட்டி, க.வே.சு.வேலவன், கொளப்பலூர் ஆ.அன்பரசு, வாணிபுத்தூர் கே.எஸ். பழனிச்சாமி, பெரிய கொடிவேரி ஏ.ஆறுமுகம், காசிபாளையம் எம்.எம். பழனிசாமி, நம்பியூர் எஸ்.பி.ஆனந்தகுமார், எலத்தூர் எஸ்.எம். வி.சண்முகம், பவானி சாகர் டி.ஏ.மோகன், கெம்மநாயக்கன்பாளையம் கே.ரவிச்சந்திரன், அரியப்பம்பாளையம் ஏ.எஸ்.செந்தில்நாதன் ஏ.திருவேங்கடம், தா.கி. கிருபாகரன், கே.சரவணன், கே.கே.செல்வன், எஸ்.கருணாமூர்த்தி, ந.க.ஈஸ்வரமூர்த்தி, ஓ.என்.சுதாகர், ஏ.எம்.சேக் முகமது, நா.ரங்கநாதன், எஸ்.பி.ரமேஷ், கே.எஸ்.சங்கர் சிவக்குமார், எஸ்.ஏ.அன்பழகன், கே.ஜி. விஜய்ஆனந்த், கு.சிற்றரசு, பி.நாகராஜ, பாண்டியம்மாள், சி.குப்புலட்சுமி, ஆர். ராஜா, கே.பி.எஸ்.மகாலிங்கம், கே.எம்.தங்கராஜ், எஸ். பிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளனர்.*

*விழாவில் பவானி தெற்கு ஒன்றிய துணை செயலாளர் என்.சத்தியமூர்த்தி நன்றியுரை கூறவுள்ளார்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.கழகம் சிறப்பாக செய்து வருகிறது.*



புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் கோட்டைபட்டினத்தில் எம்.கே.ஏ.நிஷா திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட மீனவ கிராம நிர்வாகிகள் மற்றும் மீனவர்கள் கோரிக்கைகள் கேட்பு மற்றும் கலந்துரையாடல் கூட்டத்தில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் மீனவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்கள். இந்நிகழ்வுகளில் மாநில தேர்தல் பணிக்குழுச் செயலாளர் மணமேல்குடி ஒன்றிய பெருந்தலைவர் இ.ஏ.பரணிகார்த்திகேயன் மற்றும் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், மீனவர் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.